IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 76/2017 & 75/2014
P.W.4 - மகாலட்சுமி க/பெ.விஸ்வநாதன்
DATE - 01.09.2023.

வா.சா.4 மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் வாதியின் மனைவி என்றால் சரி தான். எனக்கும் வாதிக்கும் எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1996ல் ஆனது. கூட்டு குடும்ப சொத்துகள் என்றால் என்னவென்றால் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து சம்பாதித்த சொத்தாகும். தாவாவில் எத்தனை ஐயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 7 ஐயிட்ட சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா எ அட்டவணை சொத்து வாதியின் தாத்தாவின் சுயசம்பாதித்ய சொத்து என்றால் சரி தான். வாதியின் தாத்தா இறந்த பிறகு வாதியின் தகப்பனாரும் அவரின் சகோதரரும் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரி தான். முதல் பிரதிவாதி அவர் உயிருடன் இருந்த போது குடும்ப நலனுக்காக சில சொத்துகளை விற்றார் என்றால் சரியல்ல. அவர் பெற்ற கடன்களுக்காக தான் விற்றார். முதல் பிரதிவாதிக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லை என்றால் சரியல்ல. அவருக்கு குடிபழக்கம் உண்டு. அவருக்கு எந்த கெட்ட பழக்கம் இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக நான் அவருக்கு குடி பழக்கம் இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் பிரதிவாதியின் தகப்பனாரால் கிரையம் பெற்ற சொத்துகளில் அவர் பேரன்களுக்கு எந்த பாகமும் இல்லை என்றாலும் அது அவர் தனிப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. முதல் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருந்த போது 2015ல் இறந்து விட்டார் என்றால் சரி தான். முதல் பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் பாகபிரிவினை பெற்ற சொத்துகளில் கிரையம் செய்தது போக மீதமுள்ள சொத்துகளில் பாகம் பிரித்து கொள்ள பிரதிவாதிகள் 2, 3, மற்றும் 9 ஆகியோர்களுக்கு எந்த ஆட்சேபணையும்

இல்லை என்றால் எனக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை. வாதி எனக்கு திருமணத்திற்கு முன்பே உறவினரா என்றால் இல்லை. நான் எந்த ஊர் என்றால் வாலாஜா. தாவா பி அட்டவணை சொத்துகள் என் மாமியார் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரி தான். என் மாமியார் கிரையம் பெற்றது மொத்தம் 29 செண்ட் என்றால் சரி தான். என் மாமியார் பெயரில் 14 1/2 செண்ட் 1973ல் நவாப் ஜான் என்பவரிடம் இருந்து வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெறப்பட்டது என்றால் சரி தான். அதே தேதியில் முதல் பிரதிவாதியின் சகோதரர் நடராஜன் என்பவர் 14 1/2 செண்ட் கிரையம் பெற்றார் என்றால் சரி தான். அதன் பிறகு நடராஜன் அவர் கிரையம் பெற்ற சொத்தை என் மாமியார் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சொத்துக்கு சொத்து மாற்றி கொண்டார்கள். கிரையம் வாங்கவில்லை. ஆக மொத்தம் 29 செண்ட் என் மாமியார் பெயரில் உள்ளது என்றால் சரி தான். பட்டா என் மாமியார் பெயரில் தான் இருந்தது என்றால் சரி தான். 1973ல் என் மாமியார் கிரையம் பெற்ற போது என் கணவருக்கு சுமார் 10 வயது இருக்கும் என்றால் சரி தான். என் மாமியார் நவாப்ஜானிடம் கிரையம் பெற்ற 14 1/2 செண்ட் நிலத்தில் தான் வீடு கட்டினார் என்றால் சரி தான். எங்கள் திருமணத்திற்கு முன்னரே அந்த வீட்டை கட்டி விட்டார்கள் என்றால் சரி தான். அந்த வீடு கட்டுவதற்கு என் கணவர் பணம் கொடுத்தாரா என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். என் கணவர் பணம் கொடுத்தது எனக்கு நேரிடையாக தெரியாது என்றாலும் ஆனால் நேரிடையாக தெரியும் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் கணவர் சொன்னதன் பேரில் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் மாமியார் 10 மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆகி வந்த போது எந்த மாடுகளும் இல்லை. என் மாமியார் பால் வியாபாரத்தில் வந்த பணத்தை வைத்து தான் மனை வாங்கி வீடு கட்டினார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் மாமனார் தாக்கல் செய்திருந்த பதில் உரையில் தாவா பி அட்டவணை சொத்து என் மாமியாரின் தனிப்பட்ட சொத்து என்று கூறி உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அது அவரின் தனிப்பட்ட சொத்து அல்ல. என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் இந்த வழக்கிற்காக அவ்வாறு கூறி

உள்ளேன் என்றாலும் சரியல்ல. தற்போது என்னிடம் நகை எவ்வளவு உள்ளது என்றால் எதுவும் இல்லை. என் தாய் வீட்டில் போட்ட நகைகளை என் மாமனார் அடமானம் வைத்து விட்டதாக கூறி உள்ளதை நிருபிக்க அடமான ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நகைகள் மட்டும் கொடுத்தேன். அடமானம் குறித்து நான் எதுவும் கேட்கவில்லை. எந்த இடத்தில் என் மாமனார் அடமானம் வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. என் மாமனார் என் நகைகளை எப்போதும் அடமானம் வைக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய நகைகளில் 21 சவரன் நகைகளை எப்போது யாருக்கு விற்றார் என்றால் 2001ல் விற்றார். ஆனால் யாருக்கு விறறார் என்று எனக்கு தெரியாது. 2001ல் இருந்து 2011ல் என் மாமனார் இறக்கும் வரை என் நகைகளை திருப்பி கேட்டோ அல்லது அதற்கான பணத்தை கேட்டோ அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. என் நகைகளை என் மாமனார் விற்றதாக என் கணவர் அவரின் பிரமாண வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் சொல்லவேயில்லை என்றாலும் முதல் முறையாக நான் தான் தற்போது என் மாமனார் என் நகைகளை விற்று விட்டதாக இவ்வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. என் மாமனார் இராணுவத்தில் பணி புரிந்து ஒய்வு பெற்றார் என்றால் சரி தான். அவருக்கு ஒய்வூதியம் வந்தது என்றால் சரி தான். என் மாமனார் அலமேலுரங்காபுரத்தில் உள்ள எஸ்.டி.ஆறுமுகம் என்பவரின் மாந்தோப்பை குத்தகைக்கு எடுத்தார் என்றும் அதில் வருமானம் வந்தது என்றாலும் என் திருமணத்திற்கு பிறகு எந்த குத்தகையும் எடுக்கவில்லை. முதல் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் வாலாஜா, ஆற்காடு ஆகிய ஊர்களில் மாந்தோப்புகளை குத்தகைக்கு எடுப்பார்கள் என்றால் என் திருமணத்திற்கு பிறகு எந்த குத்தகையும் எடுக்கவில்லை. முதல் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் மாந்தோப்புகளை குத்தகைக்கு எடுத்து வருமானம் ஈட்டி வந்தார்கள் என்றாலும் நான் இந்த வழக்கிற்காக என் கணவர் மட்டும் தான் வருமானம் ஈட்டி வந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் என் மாமனார் மாமியாருடன் கூட்டு குடும்பமாக இருந்தேன் என்றால் சரி தான். என் கணவர் இராணுவத்தில் இருந்து எனக்கு பணம் அனுப்பினாரா என்றால் இல்லை. என் கணவர் எப்போதெல்லாம் வருவார் என்றால் வருடத்திற்கு ஒரு முறை வருவார். என் கணவர் என்

பிள்ளைகளின் படிப்பு செலவிற்கும் எங்கள் செலவிற்கும் தான் பணம அனுப்புவார் என்றாலும் கூட்டு குடும்ப நலனிற்காக பணம் அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதி முருகன் புருனே என்ற வெளிநாட்டிற்கு வேலை சென்றார் என்றால் சரி தான். எவ்வளவு ஆண்டு அங்கு அவர் வேலை செய்தார் என்றால் 3 மாதம் கூட செய்யவில்லை. 3ம் பிரதிவாதி 2 ஆண்டுகள் அங்கு வேலை செய்தார் என்றும் திரும்பி வரும் போது அவர் கொண்டு வந்த நிறைய பணத்தை வைத்து சில சொத்துகளை வாங்கினார் என்றால் சரியல்ல. அவர் உடல்நிலை சரியில்லாமல் திரும்பி வந்து விட்டார். பி அட்டவணை சொத்தின் ஒரு பகுதி சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக அரசாங்கத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரி தான். அவ்வாறு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்காக நஷ்ட ஈடு தொகை என் மாமியாருக்கு தான் வழங்கபட்டது என்றால் சரி தான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் போக மீதி உள்ள நிலத்தின் ஒரு பகுதி 3வது பிரதிவாதிக்கு செடடில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி தான். மற்றொரு பகுதியை 4வது பிரதிவாதி ஜோதிக்கு வா.சா.ஆ.8 ஆவணம் மூலம் செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். இரண்டு செட்டில்மென்ட் பத்திரங்கள் எழுதி வைத்த பிறகு சுமார் 15 ஆண்டுகள் என் மாமியார் நல்ல நிலையில் தான் இருந்தார் என்றால் சரி தான். என் மாமியார் தாக்கல் செய்த பதில் உரையில் அவர் எழுதி வைத்த செட்டில்மென்ட பத்திரங்கள் அவர் விருப்பத்தின் பெயரில் எழுதி வைக்கப்பட்டதாக தான் கூறி உள்ளார் என்றால் சரி தான். ஆட்டோநகரில் என்பெயரில் ஒரு மனை என் கணவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் இல்லை. ஏரியூர் பஜனை கோயில் தெருவில் 981 சதுர அடி மனையை என் கணவர் கிரையம் பெற்றதை என் பெயரில் கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி தான். பாறைவீதி என்ற இடத்தில் என் கணவருக்கு ஒரு வீடு உள்ளது என்றால் அது அரசு புறம்போக்கு இடமாகும். என் கணவர் இராணுவத்தில் பணி புரிந்து பல சொத்துகளை அவர் பெயரிலும் சில சொத்துகளை என் பெயரிலும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் தவறு. என் கணவர் எனக்காகவும், என் பிள்ளைகளுக்காகவும் மட்டும் தான் பணம் அனுப்பினார் என்றாலும் அவரின் தாய் தகப்பனாருக்கு எந்த பணமும் அனுப்பவில்லை என்றாலும் தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அ.வ.எண்.77/2017 என்ற வழக்கு தற்போது

நிலுவையில் இல்லை என்றால் சரி தான். தாவா பி அட்டவணை சொத்து என் மாமியாரின் சுய சம்பாதித்ய சொத்து என்றாலும் அதில் கட்டி உள்ள வீடு அவரின் சொந்த வருமானத்தை கொண்டு கட்டியதால் அந்த சொத்தை அவர் யார் பெயரில் வேண்டுமானாலும் கிரையமோ அல்லது செட்டில்மென்ட் எழுதி வைக்கவும் எல்லா உரிமையும் அவருக்கு உள்ளது என்றாலும் அதில் கேள்வி கேட்க என் கணவருக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தை ஏற்கனவே என் மாமியார் 3வது மற்றும் 4வது பிரதிவாதிக்கு செட்டில்மென்ட எழுதி வைத்துவிட்டதால் அதில் பாகம் கேட்க என் கணவருக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து பி அட்டவணையை பொறுத்து தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா எ அட்டவணையை பொறுத்து முதல் பிரதிவாதி விற்றது போக மீதி உள்ளது மட்டும் தான் பாகபிரிவினைக்கு உட்பட்டது என்றால் சரியல்ல. அதிலும் வாதிக்கு 3 பாகம் உள்ளதாக சொல்வது சரியல்ல என்றால் தவறு. தாவா எ அட்டவணை சொத்து மட்டும் 5 பாகமாக பிரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY

ADJ(FTC), VELLORE